செ.வெ. எண்: 239 நாள்: 29.03.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.3.2012 அன்று தலைமைச் செயலகத்தில், கிராம நிருவாக அலுவலர்களுக்கு 22 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவில் மடிக்கணினி, பிரிண்டர் மற்றும் கணினிப் பயிற்சி கையேடுகளை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

கிராம நிருவாக அலுவலர்கள் தங்கள் பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக, கடந்த 14.11.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் கிராம நிருவாக அலுவலர்களுக்கு புதிய மடிக்கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் கணினிப் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதனடிப்படையில், 22 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் கிராம நிருவாக அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் மடிக்கணினி, பிரிண்டர் மற்றும் கணினிப் பயிற்சி கையேடு வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏழு கிராம நிருவாக அலுவலர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 7,787 கிராம நிருவாக அலுவலர்கள் பயனடைவார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 3,318 கிராம நிருவாக அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு நபர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பணிநியமன ஆணைகளை 27.3.2012 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசு அலுவலகங்கள் அனைத்தும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இயங்கி, நலத் திட்டங்கள் அனைத்தும் விரைவாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன் தங்களுக்கு மடிக்கணினி, பிரிண்டர் மற்றும் கணினிப் பயிற்சி கையேடுகளை வழங்கியமைக்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை கிராம நிருவாக அலுவலர்கள் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 29.3.2012